# 2015 நவம்பர 21ம் திகதி, வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நடத்தப்பட்ட இருதரப்பு கூட்டத்தின் பின்னர், ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி தூதுவர் சமந்த பவர் முன்வைத்த கருத்துக்கள்.

அமைச்சர் அவர்களே, இலங்கைக்கு வருகை தந்தமை ஓர் அபூர்வமான அனுபவமாகும். நான் ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் காலடியெடுத்து வைத்த போதிலும், உங்கள் செயல் திறன் மிக்க நாட்டின், விருந்தோம்பல் பண்பு, என்னை பெரிதும் கவர்ந்துள்ளதாக உணர்கின்றேன். இந்த ஆண்டு பெப்ரவரி மாத்தில், நாம் முதல் முறையாக சந்தித்தோம் என்பதை நீங்கள் ஞாபகப்படுத்தினீர்கள். இவ்வளவு குறுகிய காலத்தினுள், ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள உறவுகள் ஊடாக, இருதரப்பினருக்கும், பொதுவான பல விடயங்களை இட்டு, ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு, மாத்திரம் அல்லாது, பரந்துபட்ட சர்வதேச சமூகத்தின், கூட்டுப் பாதுகாப்புப் பற்றியும், ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நாம் ஆற்றல் பெற்றுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையினுள் இலங்கையும், ஐக்கிய அமெரிக்க இராச்சியமும் நேர்மையான பங்காளர்களாக பணியாற்றி வருகின்றன. செப்தெம்பர் மாதத்தில் நிகழ்ந்த, ஜனாதிபதி ஒபாமாவின் சமாதானத்திற்கான மாநாட்டிற்கு, இலங்கை ஜனாதிபதி வருகை தந்து, வேறு எந்த நாட்டுத் தலைவரும் முன்வைக்காத, மிக முக்கியத்துவம் வாய்ந்த பல உறுதி மொழிகளை வழங்கி, மிகச் சக்திவாய்ந்த பிரகடனத்தையும் செய்தார். உலகம் பூராவும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக வகைப்பொறுப்புக்கள் பற்றிய, பிரச்சினைகளின் போது, உலகின் பல்வேறு இடங்களில், இந்த உரிமைகளின் சார்பில் தோன்றும் எமது மிகவும் நெருங்கிய பங்காளனாக இலங்கை செயற்பட்டுவருகிறது.

வெளிநாட்டு அமைச்சரை அறிமுகம் செய்து கொண்ட சிறப்புரிமை, ஒன்பது மாதங்களுக்கு முன்பு கிடைத்ததை என்னால் நம்பமுடியவில்லை. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தினதும் இலங்கையினதும் எதிர்கால ஒத்துழைப்பு நடவடிக்கைகளை கலந்துரையாடுவதற்கு இங்கு வருகை தந்தமை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். இந்த ஒத்துழைப்பு புத்தாக்கமும் நவீனத்துவமும் கொண்ட முறையை முன்னெடுக்கும் என நான் நம்புகின்றேன்.

2010ம் ஆண்டின் பின்னர், நான் இலங்கைக்கு விஜயம் செய்த முதல் சந்தர்பம் இதுவாகும். இங்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களும், மக்களின் உற்சாகமும், எமக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிட விரும்புகிறேன். அண்மையில் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் பிரிவினைக்குப் பதிலாக், நல்லிணக்கத்தையும், அச்சத்திற்கு பதிலாக அபிலாஷையின் மார்க்கத்தையும் இலங்கை மக்கள் தெரிவு செய்து, ஜனநாயகத்திற்கு வகை பொறுப்புக் கூறும் ஆட்சியை அமைத்துள்ளனர்.

நீங்கள் அறிந்த வகையில் இற்றைக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், ஜனாதிபதி ஒபாமாவின் தேர்தல் இயக்கத்தின் தொனிப்பொருள்: 'அபிலாஷையாகும்'. உலகம் பூராவும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறும் இன்று கூட 'அஞ்ச வேண்டாம்' என்றே அமெரிக்க மக்களிடமும் சர்வதேச சமூகத்திடமும் ஒபாமா வேண்டுகோள் விடுத்துள்ளார். உலகம் பூராவும் வாழும் மக்கள் சர்வதேச ரீதியில் நீதியான அபிலாஷைகளையும் மனித அபிமானத்தையும் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையையே முன்வைத்துள்ளார்.

நான் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கும், இலங்கைச் சமூகத்தின் பரந்துபட்ட பிரிவினருடன் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கும், எதிர்பார்க்கின்றேன். அரசின் பல்வேறு துறையினரைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதே சமயம். எதிர்க்கட்சியினரையும், சிவில் சமூகத் தலைவர்களையும், மனித உரிமைப் பாதுகாவலர்களையும், ஊடகவியளாலர்களையும், சந்திக்க உத்தேசித்துள்ளேன். இலங்கையின் வடமாகாணத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியமை, குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் விஜயம் மேற்கொண்ட இடங்களை மீண்டும் காண்பதற்கும், அண்மைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய கொள்கைகளின் தாக்கத்தை அவதானிப்பதற்கும் விரும்புகின்றேன்.

இந்த மகோன்னத நகரை நான் மீண்டும் வந்தடைந்ததன் பின்னர், மாணவர்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டும். ஜனநாயக ரீதியாக அவர்கள் எதிர்காலத்தை காணும் முறையைப் பற்றி, அவர்களிடமிருந்தே கேட்டறிவதற்கு நான் முயற்சி செய்வேன். ஏனெனில் சுபீட்ஷமான இலங்கையை சிருஷ்டிப்பதற்கு, இலங்கையின் தலைவர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் இன்று வாழும், இளைஞர்களுக்கு பிரகாசமானதும் சுபீட்சமானதுமான இலங்கையை சிருஷ்டித்துத் தரும். மேற்படி எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு இந்த இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அமைச்சருடனும் அவருடைய குழுவினருடனும் இடம்பெற்ற இரு தரப்புக் கூட்டத்தில் நான் குறிப்பிட்ட ஒரு விடயத்தை இறுதியாக இலங்கை மக்களுக்கும் அறிவிக்க விரும்புகிறேன். நீங்கள் எவருமே எண்ணிக்கூட பார்க்க முடியாதவாறு, இலங்கையில் நடைபெறும் விடயங்களையிட்டு முழு உலகமும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு வருகிறது. கடந்த ஒன்பது அல்லது பத்து மாதங்களில் மிகவும் சிக்கலான ஒரு அரசியல் சூழமைவு செயற்பட்டது. இக்கால கட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் முழு உலகத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. நான் அமைச்சருக்குக் கூறியவாறு, ஓர் உதாரணமாக உலகம் பூராவும் பதவி வகிக்கும், ஜனாதிபதிகள் தமது பதவிக்காலத்தையும் அதிகாரங்களையும் அதிகரிப்பதற்காக, அரசியலமைப்பில் மாற்றங்களை செய்யும் ஒரு காலகட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு உங்கள் ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தீர்மானம் மிக முக்கியத்துவம்வாய்ந்தது. இது இலங்கையில் சரிபாரத்தலையும் சமநிலைபடுத்தலையும் (checks and balances) உரிய முறையில் செயற்படுத்துவதற்கும், வலுவூட்டுவதற்கும் மிக அத்தியாவசியமானது. இவை இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற சமிக்ஞையை உலகம் பூராவும் அனுப்பி, அவை பலவீனம் அடைந்ததும் இந்த சரிபார்த்தலையும் சமநிலைப்படுத்தலையும் மீண்டும் மறுசீரமைத்து வலுவூட்டுவது மிக முக்கியமானது. பரிஸ் நகரத்திலும் அல்லது மாலி நாட்டின் பெமகோவிலும், அதற்கு முன்னர் பேரூட், பாக்தாத், மற்றும் அங்கரா போன்ற இடங்களிலும் இடம்பெற்ற தாக்குதல்கள், இது எவ்வளவு கஷ்டமானது என்பதை வலியுறுத்துகிறது. உலகம் பூராவும் வாழும் அனேகமான பிரஜைகளுக்கு இது ஒரு கடினமான காலகட்டமாக மாறியுள்ளது. இலங்கை இவ்விடயத்தில் முழு உலகத்திற்கே ஒரு முன்னுதாரணத்தை வழங்கிய நாடாக புகழ் பெற்றுள்ளது. இலங்கை, பயங்கரவாதத்தை வெற்றி கொண்டது மாத்திரம் அல்லாது நீண்டகால சிவில் யுத்தத்தின் கஷ்டமான விளைவுகளையும் அனுபவித்தது. தற்போது அவற்றை சமநிலைப்படுத்த கஷ்டப்படும் நாடாகவே இலங்கை திகழ்கிறது. கடந்த காலத்தின் கொடைகளான இந்த கஷ்டமான பிரச்சினைகளை, அச்சமின்றி எதிர்கொண்டு, பிரகாசமான ஓர் எதிர்காலத்தை நோக்கி இலங்கை வீறுநடை போடுகின்றது.

உங்களுடைய நடவடிக்கைகளை அவதானிப்பதன் மூலம் நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறோம். மிகவும் சக்திவாய்ந்த ஜனநாயக நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு உதவி செய்வதற்கும், ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறியவும், இலங்கை மக்களுடன் கலந்துரையாடுவதற்கும், நான் இங்கு வருகை தந்துள்ளேன். உங்கள் அனைவருக்கும் நன்றி.